# ஐரோப்பிய வரலாறு

1401) பெல்ஜியத்தின் வழியாக ஜெர்மனி பிரான்சை தாக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த பெல்ஜியத்தின் அரசர் யார்?

**முதலாம் ஆல்பிரட்**

1402) பெல்ஜியத்தில் ஜெர்மானியப் படைகள் எப்போது நுழைந்தன?

**1914, ஆகஸ்ட் 4**

1403) பெல்ஜியத்தின் நடுநிலையைக் காக்கும் பொருட்டு ஜெர்மனி மீது எந்த நாடு போர் தொடுத்தது?

**இங்கிலாந்து**

1404) ஜப்பான் கியாசௌ பகுதியை எந்த தேதிக்குள் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென ஜெர்மனிக்குகெடு விதித்தது?

**1914, செப் 15**

1405) பால்கன் பகுதியில் தன்னை பலவீனப்படுத்திய இரஷ்யா மீது பழிவாங்கும் பொருட்டு ஜெர்மனியுடன் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்ட நாடு எது?

**துருக்கி**

1406) துருக்கி, இரஷ்யா மீது போர்தொடுத்தது எப்போது?

**1914 அக்டோபர் 29**

1407) 1914, சூலை 28 இல் ஆஸ்திரியாவுக்கும், செர்பியாவுக்குமிடையே ஆரம்பமான போர் எதற்குள் ஒரு உலகப் போராக உருவெடுத்தது?

**அக்டோபர் 29**

1408) ஜெர்மன் தளபதி வான்கிளக் எந்த தேதியன்று புருசல்ஸ் நகரைப் பிடித்தார்?

**ஆகஸ்ட் 20**

1409) எந்த நாட்டுப் படைகளை தங்களுக்கு ஆதரவாக பிரான்ஸின் ஜனாதிபதி பாயின் கரேயம், பிரதமர் விவியானியும் வரவேற்றனர்?

**இங்கிலாந்து**

1410) ஜெர்மானியப் படைகள் பிரெஞ்சு படைகளை எந்த இடத்தில் தோற்கடித்தது?

**சார்லீராய்**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1411) பாரிசு நகரத்திலிருந்து 20 மைல் தூரத்திலிருந்து எந்த நதிக்கரையில் ஜெர்மானியப் படைகள் குவிக்கப்பட்டுருந்தது?

**மார்ன் நதிக்கரை**

1412) ஜெர்மானியப் படையெடுப்பால் பிரெஞ்சு நாட்டின் தலைநகர் பாரிசிலிருந்து எங்கு மாற்றப்பட்டது?

**போர் டோ**

1413) இங்கிலாந்து, பிரான்சுக்குமிடையே உள்ள போக்குவரத்தை துண்டித்து விட எந்த துறைமுக நகரங்களை பிடிக்க ஜெர்மனி முடிவு செய்தது?

**டன் கர்க், கலே, ஆஸ்டெண்டு**

1414) முதல் உலகப் போரில் புகுத்தப்பட்ட புதுமையான போர் முறை எது?

**அகழிப்போர் முறை**

1415) கடலிலிருந்து ஆல்ப்ஸ் மலைவரை நீண்ட அகழிகளை வெட்டிய நாடுகள் எது?

**நேச நாடுகள்**

1416) எந்த சண்டையின் காரணமாக படை வீரர்கள் அகழிப் பதுங்கு குழிகளில் மறைந்து கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது?

**விமானச் சண்டை**

1417) அகழிப்போர் முறை எத்தனை ஆண்டுகள் நீடித்தது?

**நான்கு**

1418) ஜெர்மானியத் தளபதியான ஹிண்டன் பர்க் 1914 ஆகஸ்ட் 26 ஆம் நாள் எந்த இடத்தில் இஷ்யர்களை தோற்கடித்தார்?

**டான்னன் பர்க்**

1419) மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள டோகாலாந்து, கேமரூன்ஸ் ஆகியவை எதன் வசமாயின?

**நேசப்படை**

1420) முதல் உலகப் போரின் போது ஸாமோவை கைப்பற்றிய நாடு எது?

**நியூசிலாந்து**

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1421) ஆஸ்திரேலியா முதல் உலகப் போரின் போது கைப்பற்றிய பகுதி எது?

**நியுகினியா**

1422) ஜெர்மனியப்படை போலந்தின் மீது எப்போது படையெடுத்தது?

**1915 மே மாதம்**

1423) போலந்து தலைநகரான வார்சா ஜெர்மனியிடம் எப்போது சரணடைந்தது?

**1915, ஆகஸ்ட் 4**

1424) முதல் உலகப் போரில் கலிப்போலி, மெசபடோமியா ஆகிய இடங்களில் வெற்றி பெற்ற நாடு எது?

**துருக்கி**

1425) சோம் நதிப் போரில் எந்த நாடு தோற்கடிக்கப்பட்டது?

**ஜெர்மனி**

1426) மியூஸ் நதிக் கரையிலிருந்த எந்த நகரம் பாரிசுக்குச் செல்லும் வழிகளில் முக்கியமானது?

**வெர்டன் நகரம்**

1427) ஜெர்மனி தனது எந்த வலிமையால் பல ஆங்கில வியாபாரக் கப்பல்களை மூழ்கடித்தது?

**நீர் மூழ்கிக்கப்பல்**

1428) முதல் உலகப் போரின் ஆரம்பத்தில் பாக்லாந்து தீவுகட்கு அருகே ஆங்கிலக் கப்பற்படைத் தலைவரான யார் நான்கு ஜெர்மனி யுத்தக் கப்பல்களை நாசமாக்கினார்?

**அட்மிரல் ஸ்டர்டி**

1429) ஜெர்மானியர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இடையே ஜட்லாந்துப் போர் எப்போது நடைபெற்றது?

**1916 மே மாதம்**

1430) ஜட்லாந்துப் போரில் ஜெர்மானியர்களை தோல்வி கண்டு ஓடச் செய்த ஆங்கில கப்பற்படைத் தளபதி யார்?

**ஜெலி கோவ்**

அறிவுகடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1431) இரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியினால் யார் தலைமையில் புதிய கம்யூனிச அரசாங்கம் ஏற்பட்டது?

**லெனின்**

1432) இரஷ்யா ஜெர்மனியுடன் எந்த உடன்படிக்கையை 1918 இல் செய்து கொண்டு முதல் உலகப் போரிலிருந்து விலகியது?

**பிரஸ்ட்லிட்டோவ்ஸ்க்**

1433) முதல் உலகப் போர் தொடங்கியதும் அமெரிக்கா போரில் நடுநிலை வகிக்கும் என்று கூறிய அமெரிக்க ஜனாதிபதி யார்?

**உட்ரோ வில்சன்**

1434) முதல் உலகப் போரின் போது அமெரிக்க மக்களில் பெரும்பாலோர் யார் தலைமையிலான நேச நாடுகளிடம் அனுதாபம் காட்டினர்?

**இங்கிலாந்து**

1435) "அமெரிக்க மக்கள் உயிரிழக்க நேரிட்டாலோ' அதற்கு முழுப் பொறுப்பினையும் ஜெர்மனி ஏற்க வேண்டுமென" எச்சரிக்கை விடுத்தவர் யார்?

**உட்ரோ வில்சன்**

1436) "பலபா" என்ற அமெரிக்கக் கப்பல் தாக்கப்பட்டதால் ஒரு அமெரிக்கர் இறந்தது எப்போது?

**1915 மார்ச் 28**

1437) ஆங்கில பயணிகள் கப்பலான "லூசிட்டானியா" எப்பொழுது மூழ்கடிக்கப்பட்டது?

**1915 மே 7**

1438) "லூசிட்டானியா" மூழ்கடிக்கப்பட்ட பொழுது அதிலிருந்த ஆண், பெண், குழந்தைகள் உட்பட எவ்வளவு பேர் உயிரிழந்தனர்?

**1,198 பேர்**

1439) "லூசிட்டானியா" கப்பல் மூழ்கடிக்கப்பட்ட போது அதில் பயணம் செய்த அமெரிக்கர்கள் எவ்வளவு பேர் இறந்தனர்?

**128 பேர்**

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1440) உட்ரோவில்சன் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக எந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்?

**1916**

1441) உட்ரோவில்சன் இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியானதும் முதல் உலகப் போரை நிறுத்த அவர் மேற் கொண்ட குறிக்கோள் என்ன?

**வெற்றியின்றி அமைதி (Peace without victory)**

1442) ஜெர்மனி, இங்கிலாந்தை பணியவைக்க கட்டுப்பாடற்ற நீர்மூழ்கிக் கப்பற் போரில் ஈடுபடப் போவதாக அறிவித்தது எப்போது?

**1917 சனவரி 31**

1443) ஜெர்மனி மீது போர் தொடுக்க வில்சன், அமெரிக்க காங்கிரஸிடம் எப்போது அனுமதி கேட்டார்?

**1917 ஏப்ரல் 2**

1444) ஜெர்மனி மீது அமெரிக்கா எப்போது போர் தொடுத்தது?

**புனித வெள்ளியன்று (1917 ஏப்ரல் 6)**

1445) "தாம் ஜெர்மானிய அரசின் மீதுதான் போர் தொடுப்பதாகவும், ஜெர்மானிய மக்கள் மீது அல்ல என்றும், அவர்கள் மீது அன்பும் நட்பும் கொண்டுள்ளதாகவும்" அறிவித்தது யார்?

**உட்ரோ வில்சன்**

1446) 1917 சூன் மாதம் அமெரிக்க இராணுவத்தின் முதல் பகுதி எங்கு தரையிறங்கியது?

**பிரான்ஸ்**

1447) முதல் உலகப் போரில் வெற்றி நிச்சயம் என்பதை உணர்ந்த வில்சன், உலக அமைதிக்காக தனது குறிக்கோள்களை வரையறை செய்து அமெரிக்க காங்கிரசில் சமர்ப்பித்தது எப்போது?

**1918 சனவரி 8**

1448) உட்ரோ வில்சனின் அமைதித் திட்டத்திற்கு பெயர் என்ன?

**வில்சனின் 14 அம்சக் கோட்பாடுகள்**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1449) உலக நாடுகள் தங்கள் எல்லைப் பிரச்சனையை தீர்த்துக் கொள்ள எது நிறுவப்பட வேண்டும் என்று உட்ரோ வில்சன் கூறினார்?

**சர்வதேச சங்கம்**

1450) உட்ரோ வில்சனின் 14 அம்ச திட்டத்தை அமைதி முறையில் ஏற்றுக் கொள்வதாக ஜெர்மனி கூறியது எப்போது?

**1918, செப்டம்பர் மாதத்தில்**

1451) 1918, செப்டம்பரில் பணிந்து அமைதியை நாடிய நாடுகள் எது?

**பல்கேரியும், துருக்கியும்**

1452) 1918 ஆம் ஆண்டு எந்த மாதத்தில் ஆஸ்திரியா பணிந்தது?

**நவம்பர்**

1453) ஜெர்மானியப் பேரரசில் இருந்த எந்தெந்த நாடுகள் தங்களை சுதந்திர நாடுகளாக முதல் உலகப் போருக்கு பிறகு அறிவித்து கொண்டன?

**செக்ஸ்லாவோக், போலந்து, யூகோஸ்லாவ், ஹங்கேரி**

1454) தவறான வழியில் தங்களை நடத்திச் சென்று விட்டதாக ஜெர்மனி மக்கள் யார் மீது கோபம் கொண்டனர்?

**கெய்சர் வில்லியம்**

1455) புதிய ஜெர்மானிய சான்சலர் இளவரசர் மாக்ஸ், அமைதி ஒப்பந்தத்தில் ஜெர்மனி எப்பொழுது கையெழுத்திடுவதாக கூறினார்?

**அக்டோபர் 3**

1456) கெய்சர் வில்லியம் எப்பொழுது முடிதுறப்பதாக அறிவித்தார்?

**நவம்பர் 9**

1457) கெய்சர் வில்லியம் முடிதுறந்து எங்கு செல்வதற்காக இரயில் ஏறினார்?

**நெதர்லாந்து**

1458) கி.பி 1871இல் முதலாம் வில்லியத்துடன் ஜெர்மனியில் ஆட்சியிலமர்ந்த கோகன் சோலர்ன் வம்சம் எந்த ஆண்டு இரண்டாம் வில்லியத்துடன் முடிவடைகிறது?

**கி.பி 1918**

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1459) ஜெர்மனி, பாரிசுக்கு அருகில் நேச நாடுகளுடன் அமைதி உடன் படிக்கையில் எப்போது கையெழுத்திட்டது?

**1918 நவம்பர் 11**

1460) முதல் உலகப் போர் எப்போது முடிவடைந்தது?

**1918 ஆம் வருடம், 11 ஆவது மாதம், 11 ஆம் நாள், காலை 11 மணி**

1461) முதல் உலகப் போர் எத்தனை நாட்கள் நடைபெற்றது?

**1565 நாட்கள்**

1462) முதல் உலகப் போரில் எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர்?

**சுமார் ஒரு கோடி பேர்**

1463) முதல் உலகப் போரில் அமெரிக்க வீரர்கள் எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர்?

**ஒரு இலட்சம் பேர்**

1464) முதல் உலகப் போரில் இரஷ்ய வீரர்கள் எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர்?

**17 இலட்சம் பேர்**

1465) முதல் உலகப் போரில் கொல்லப்பட்ட ஜெர்மானிய வீரர்கள் எத்தனை பேர்?

**18 இலட்சம் பேர்**

1466) முதல் உலகப் போரில் கொல்லப்பட்ட இங்கிலாந்து வீரர்கள் எத்தனை பேர்?

**ஓன்பது இலட்சம்**

1467) முதல் உலகப் போரில் காயமடைந்தவர்கள் எத்தனை பேர்?

**இரண்டு கோடி பேர்**

1468) முதல் உலகப் போரில் அழிக்கப்பட்ட சொத்துக்கள் எவ்வளவு?

**2000 கோடி டாலர்**

1469) முதல் உலகப் போரில் எல்லா நாடுகளும் மொத்தத்தில் போருக்காக செலவு செய்த தொகை எவ்வளவு?

**1900 கோடி டாலர்**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1470) அயர்லாந்தில் தேசிய இயக்கம் வலுவடைந்து எப்போது அது சுதந்திரமடைந்தது?

**கி.பி 1921**

1471) முதல் உலகப் போரின் விளைவாக தூரக் கிழக்குப் பகுதியில் எது வலிமை பெற்ற வல்லரசாக உருவானது?

**ஜப்பான்**

1472) ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் ஒரு சவாலாக விளங்கிய இராணுவ வல்லரசு எது?

**ஜப்பான்**

1473) முதல் உலகப் போரின் போது புரட்சி ஏற்பட்டு சார் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு கம்யூனிச அரசு நிறுவப்பட்ட நாடு எது?

**இரஷ்யா**

1474) முதல் உலகப் போரின் விளைவாக எந்த கோட்பாடு புதிய பரிணாமத்தை பெற்றது?

**சக்தி சமநிலைக் கோட்பாடு**

1475) அரசியல், இராணுவ பொருளாதார செல்வாக்கு மையம் ஐரோப்பாவிலிருந்து நீங்கி எங்கு சென்றது?

**அமெரிக்கா**

1476) முதல் உலகப் போருக்கு பிறகு ஐரோப்பிய நாடல்லாத எது உலக அரசியல் நடவடிக்கைகளின் மையமாகியது?

**அமெரிக்கா**

1477) தொழிலாளர் நலன்களைப் பேணுவதற்காகவே சர்வதேச சங்கத்தின் கீழ் எது உருவாக்கப்பட்டது?

**உலக தொழிலாளர் நிறுவனம்**

1478) முதல் உலகப் போருக்கு பிறகு எது அதிகரித்ததால் விவசாயிகள் அதிக லாபம் பெற்றனர்?

**விலை குறியீடு**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1479) முதல் உலகப் போரின் போது ஆண்கள் போரில் ஈடுபட்டதால் பல நாடுகளில் பெண்கள் உள்நாட்டு விவகார நிர்வாகத்தில் ஈடுபட்டதால் யாருக்கு முக்கியத்துவம் அதிகரித்தது?

**பெண்கள்**

1480) முதல் உலகப் போரின் விளைவாக எது வளர்ச்சிடைந்தது?

**பன்னாட்டியல் (Inter nationalism)**

1481) முதல் உலகப் போரின் தொடர்ச்சியாக எந்த ஆண்டில் உலகப் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டது?

**கி.பி 1929**

1482) போர்களை முடித்து வைப்பதற்காக செய்யப்பட்ட போர் (war to end war) என்று எந்த போரை கூறுகின்றனர்?

**முதல் உலகப் போர்**

### வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை 1919

1483) வெர்செய்ல்ஸ் மாளிகையை கட்டியது யார்?

**14 ஆம் லூயி**

1484) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை செய்து கொள்ள பாரிஸில் மாநாடு எப்போது கூட்டப்பட்டது?

**1919 சனவரி 18**

1485) பாரிஸ் மாநாட்டுக்கு பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த யார் தலைமை வகித்தது?

**கிளமன்சோ**

1486) பாரிஸ் மாநாட்டில் எத்தனை நாட்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்?

**32 நாடுகள்**

1487) பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்ட பிரான்ஸின் பிரதிநிதிகள் யார்?

**ஜார்ஜ் கிளாமன்ஸோ, ஸ்டீபன்பிகோன்**

1488) பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்ட இங்கிலாந்தின் பிரதிநிதிகள் யார்?

**டேவிட்லாயிட் ஜார்ஜ், ஆர்தர் பெல்போர்**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1489) பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க பிரதிநிதிகள் யார்?

**உட்ரோவில்சன், ராபர்ட்லேன்சிங்**

1490) பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்ட இத்தாலிய பிரதிநிதிகள் யார்?

**விட்டோரியா ஆர்லண்டோ, சிட்னி சோனிகா**

1491) பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்ட ஜப்பான் பிரதிநிதிகள் யார்?

**நொபுகி மஹினோ, இமோசிசயோஞ்சி**

1492) பாரிஸ் மாநாட்டில் 32 பிரதிநிதிகள் கலந்து கொண்டாலும் முக்கிய முடிவுகளை எடுத்தது யார்?

**கிளமன்ஸோ, லாயிட் ஜார்ஜ், உட்ரோ வில்சன்.**

1493) வெர்செய்ல்ஸ் உடன் படிக்கையின் நகலை தயாரிக்க எவ்வளவு நாள் செலவு செய்தனர்?

**சுமார் ஆறு மாதங்கள்**

1494) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் ஜெர்மானியப் பிரதிநிதிகள் எப்போது கையெழுத்திட்டனர்?

**1919 சூன் 28**

1495) ஆர்ச்ட்யூக் பெர்டினாண்டு கொல்லப்பட்டு சரியாக எத்தனை ஆண்டுகள் கழித்து முதல் உலகப் போர் முடிவடைந்தது?

**ஐந்து ஆண்டுகள்**

1496) வெர்செய்ல்ஸ் உடன் படிக்கை எத்தனை ஷரத்துக்களைக் கொண்டது?

**400 ஷரத்துக்கள்**

1497) வெர்செய்ல்ஸ் உடன் படிக்கை எத்தனை வார்த்தைகளைக் கொண்டது?

**80,000 வார்த்தைகள்**

1498) கி.பி 1871 ஆம் ஆண்டு தான் இழந்த அல்சேஸ், லொரைன் பகுதிகளைப் பெற்றுக் கொண்ட நாடு எது?

**பிரான்ஸ்**

1499) யூபென், மால்மடி ஆகிய பகுதிகளைப் பெற்ற நாடு எது?

**பெல்ஜியம்**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1500) போஸனில் பெரும் பகுதியும், மேற்கு பிரஷ்யாவும், கேஷ்யூப்ஸ் மாவட்டமும் எந்த நாட்டுக்கு கொடுக்கப்பட்டது?

**போலந்து**

1501) பால்டிக்கடல் பகுதியிலுள்ள டான்சிக் துறைமுகம் யாரிடமிருந்து பிடுங்கப்பட்டு சுதந்திர நகரமாக்கப்பட்டு சர்வதேச சங்கத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது?

**ஜெர்மனி**

1502) ஜெர்மனியின் வளமிக்க சார் சமவெளி யாருக்கு கொடுக்கப்பட்டது?

**பிரான்ஸ்**

1503) சார் சமவெளி நிலக்கரி சுரங்கங்களை எத்தனை ஆண்டுகள் பிரான்ஸ் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டது?

**15 ஆண்டுகள்**

1504) 15 ஆண்டுகளுக்கு பிறகு சார் சமவெளி யாருக்கு சொந்தம் என்று எப்படி தீர்மானிப்பது என்று கூறப்பட்டது?

**வாக்கெடுப்பு மூலம்**

1505) கி.பி 1921 இல் மேமல் பகுதி யாருக்கு கொடுக்கப்பட்டது?

**லிதுவேனியா**

1506) ஜெர்மனின் குடியேற்றப் பகுதிகளை சர்வதேச சங்கம் எந்தெந்த நாடுகளுக்கு விருப்பம் போல் பிரித்து ஒப்படைத்தது?

**இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா**

1507) ஜெர்மனியின் குடியேற்றப் பகுதிகளை சர்வதேச சங்கம் பிரித்து கொடுத்த பகுதிகளுக்கு பெயர் என்ன?

**மாண் டேட்டுகள்**

1508) எந்த கால்வாய் அனைவருக்கும் பொதுவாக்கப்பட்டது?

**கீல் (Kiel)**

1509) காமரூன் டோகோலாந்து, டங்கனிகா ஆகியவை யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?

**இங்கிலாந்து**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1510) ஜெர்மனியின் தென் மேற்கு ஆப்பிரிக்கப் பகுதிகள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?

**தென் ஆப்பிரிக்கா**

1511) சாமோவன் தீவுகள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?

**நியூசிலாந்து**

1512) மார்ஷல் தீவுகள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?

**ஜப்பான்**

1513) நியுகினியாத்தீவுகள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?

**ஆஸ்திரேலியா**

1514) வெர்செய்ல்ஸ் உடன் படிக்கையின் ஷரத்துக்களால் ஜெர்மனி எவ்வளவு மக்கள் தொகையை இழந்தது?

**60 இலட்சம்**

1515) ஜெர்மனி வெர்செய்ல்ஸ் உடன் படிக்கையின் ஷரத்துகளால் எவ்வளவு பரப்பளவு உள்ள நிலப் பகுதிகளை இழந்தது?

**25,000 சதுர மைல்**

1516) ஜெர்மனி வெர்செய்ல்ஸ் உடன் படிக்கை ஷரத்துகளினால் எவ்வளவு பரப்பளவு குடியேற்றப் பகுதிகளை இழந்தது?

**10,27,000 சதுர மைல்**

1517) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் முக்கிய நோக்கமே எதை, பொருளாதார நீதியாக பலவீனப்படுத்துவது ஆகும்?

**ஜெர்மனி**

1518) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை ஷரத்து 231 – ஆவது பிரிவின் படி ஜெர்மனி மீது எவ்வளவு டாலர் நஷ்ட ஈடு விதிக்கப்பட்டது?

**5000,000,000 கோடி**

1519) ஜெர்மனி அடுத்த பத்து ஆண்டு காலத்திற்கு எவ்வளவு டன் நிலக்கரியை பிரான்சிற்கு கொடுக்க வேண்டுமென கூறப்பட்டது?

**70 இலட்சம்**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1520) ஜெர்மனி அடுத்த பத்து ஆண்டு காலத்திற்கு எவ்வளவு டன் நிலக்கரியை பெல்ஜியத்திற்கு கொடுக்க வேண்டுமென கூறப்பட்டது?

**80 இலட்சம்**

1521) ஜெர்மனி அடுத்த பத்து ஆண்டு காலத்திற்கு எவ்வளவு டன் நிலக்கரியை இத்தாலிக்கு கொடுக்க வேண்டுமென கூறப்பட்டது?

**77 இலட்சம்**

1522) ஜெர்மனியின் எல்ப், ஓடர், நீமென், டான்யூப் நதிகள் எதன் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது?

**பன்னாட்டு சங்கம்**

1523) ரைன் நதியின் இரு புறங்களிலும் எது வரையில் ஜெர்மனி இராணுவத்தை வைத்துக் கொள்ளக் கூடாது என கூறப்பட்டது?

**50 கிலோ மீட்டர்**

1524) ரைன் நதியின் மேற்குப் பகுதியை நேச நாடுகள் எவ்வளவு காலம் தங்கள் வசம் வைத்திருக்கும் என கூறப்பட்டது?

**15 ஆண்டுகள்**

1525) ஜெர்மனி எதை தயாரிக்கக் கூடாது என்று கூறப்பட்டது?

**நச்சு வாயு, டாங்கிகள், இராணுவ ஊர்திகள்**

1526) ஜெர்மனியின் கப்பற் படை எவ்வளவு வீரர்களையும் சில போர்க்கப்பல்களையும் மட்டுமே கொண்டதாகக் குறைக்கப்பட்டது?

**15 ஆயிரம்**

1527) வெர்செய்ல்ஸ் உடன் படிக்கையின் எத்தனையாவது பிரிவுப்படி, பன்னாட்டுச் சட்ட திட்டங்களையும், உடன் பாடுகளையும் மீறிய தற்காகவும், போரை ஆரம்பித்து பேரழிவை ஏற்படுத்தியதற்காவும் ஜெர்மனி குற்றவாளி என்று கூறப்பட்டது?

**231 ஆவது பிரிவு**

1528) "Hang the Kaiser, make Germany to pay Shilling for Shilling and ton for ton" என்று முழங்கியவர் யார்?

**லாயிட் ஜார்ஜ்**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1529) கெய்சர் நெதர்லாந்தில் தஞ்சம் அடைந்து விட்டதால் ஜெர்மனியின் எவ்வளவு குற்றவாளிகள் மட்டுமே லீப்சிக் நகரில் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள்?

**நூறு பேர்**

1530) "இந்த உடன் படிக்கையில் கையெழுத்திடும் எனது கை அழியட்டும்" என்று வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையைப் பற்றி கூறியவர் யார்?

**ஜெர்மனி பிரதிநிதி ஸ்கிட்டமான்**

1531) "இரண்டாம் உலகப் போருக்கான மூல காரணங்கள் எந்த உடன் படிக்கையில் விதையாகத் தூவப்பட்டது" என்று கூறப்படுகிறது?

**வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை**

1532) நேச நாடுகள் ஆஸ்திரியாவுடன் செயின்ட் ஜெர்மைன் என்ற இடத்தில் எப்போது உடன்படிக்கை செய்து கொண்டன?

**1919 செப்டம்பர் 10**

1533) ஆஸ்திரியாவும், ஹங்கேரியும் எந்த உடன்படிக்கையின் படி பிரிக்கப்பட்டது?

**செயின்ட் ஜெர்மைன் உடன்படிக்கை**

1534) செயின்ட் ஜெர்மைன் உடன்படிக்கையின் எத்தனையாவது ஷரத்தின் படி ஆஸ்திரியாவும், ஹங்கேரியும் இணைவது தடுக்கப்பட்டது?

**88 ஆவது பிரிவு**

1535) எந்த நாடு நேச நாடுகளுக்குப் பூர்த்தி செய்யப்படாத காசோலையை முதல் உலகப் போரின் இழப்பீடாக அளித்தது?

**ஆஸ்திரியா**

1536) நேசநாடுகள் ஹங்கேரியுடன் வெர் செய்ல்ஸிலுள்ள டிரயனான் மாளிகையில் உடன் படிக்கை ஒன்றை எப்போது செய்து கொண்டன?

**1920 சூன் 4**

1537) 1,25,000 சதுர மைலும், 22 மில்லியன் மக்கள் தொகையும் கொண்ட ஹங்கேரி எவ்வளவு சதுர மைல், மக்கள் தொகை கொண்டதாக குறைக்கப்பட்டது?

**30,000 சதுரமைல், 8 மில்லியன் மக்கள் தொகை**

1538) பல்கேரியாவுடன் நியுலி உடன்படிக்கையை நேச நாடுகள் எப்போது செய்து கொண்டன?

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

**1919 நவம்பர் 27**

1539) நேச நாடுகள் துருக்கியடன் செவ்ரஸ் உடன் படிக்கையை எப்போது செய்து கொண்டன?

**1920, ஆகஸ்ட் 20**

1540) முதல் உலகப் போரின் விளைவாக தோன்றிய புதிய சுதந்திர நாடுகள் சிலவற்றை கூறுக?

**போலந்து, செக்கோஸ் லோவேகியா, ருமோனியா, கிரிஸ்**

1541) அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சனின் 14 அம்சங்களில் கடைசியானது எது அமைப்பதாகும்?

**சர்வதேச சங்கம்**

1542) "உட்ரோ வில்சனின் சிந்தனையில் பிறந்த குழந்தை" (Brain Child of Woodrow Wilson) என்று எது கூறப்படுகிறது?

**சர்வதேச சங்கம்**

1543) சர்வதேச சங்கத்தின் சாசனம் எந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது?

**பாரிசு அமைதி மாநாடு**

1544) சர்வதேச சங்கத்தின் நோக்கங்கள் எந்த உடன் படிக்கையின் முதல் ஆறு ஷரத்துக்களுடன் இணைக்கப் பட்டது?

**வெர் செய்ல்ஸ் உடன்படிக்கை**

1545) சர்வதேச சங்கம் எப்போது பாரிஸ் நகரில் தொடங்கி வைக்கப்பட்டது?

**1920 சனவரி 10**

1546) சர்வதேச சங்கத்தின் அலுவலகம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

**ஸ்விட்சர் லாந்திலுள்ள ஜெனிவா**

1547) சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்ட போது எத்தனை நாடுகள் உறுப்பினர்களாக இருந்தனர்?

**42 நாடுகள்**

1548) 1935 ஆம் ஆண்டு சர்வதேச சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

**62 நாடுகள்**

1549) சர்வதேச சங்கம் எந்த ஆண்டு வரை செயல் பட்டது?

**1936**

1550) சர்வதேச சங்கத்தின் நோக்கம் உலக நாடுகளிடையே கூட்டுறவு மனப்பான்மையை வளர்த்து எதை நிலை நாட்டுவது ஆகும்?

**உலக சமாதானம்**

1551) வலுச்சண்டைக்குச் செல்லும் நாட்டுடன் சர்வதேச சங்க உறுப்பினர் நாடுகள் எதை நிறுத்திக் கொள்ள வேண்டும்?

**வாணிபத் தொடர்பு**

1552) சர்வதேச சங்கத்தில் எத்தனை முக்கிய அமைப்புகள் செயல்பட்டு வந்தன?

**ஐந்து**

1553) பொதுச் சபைக்கு அங்கத்தினர் நாடுகள் ஒவ்வொன்றும் எவ்வளவு பிரதிநிதிகளை அனுப்புகிறது?

**மூன்று**

1554) சர்வதேச சங்கத்தின் பொதுச்சபையிலுள்ள அங்கத்தினர்களுக்கு உள்ள வாக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு?

**ஒன்று**

1555) ஜெனிவாவில் சர்வதேச சங்கம் ஒவ்வொரு ஆண்டும் எந்த மாதத்தின் முதல் திங்கட் கிழமை கூடும்?

**செப்டம்பர்**

1556) பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளை தேர்ந்தெடுக்கும் சர்வதேச சங்கத்தின் முக்கிய அமைப்பு எது?

**பொதுச்சபை**

1557) சர்வதேச சங்கத்தின் நிர்வாக சபை எது?

**பாதுகாப்புசபை**

1558) அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய ஐந்து நாடுகளும் சர்வதேச சங்கத்தின் எந்த முக்கிய அமைப்பின் நிரந்திர உறுப்பினர்கள் ஆவர்?

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

**பாதுகாப்புசபை**

1559) பாதுகாப்புச் சபையில் இருந்த நான்கு நிரந்தரமற்ற உறுப்பினர்கள் 1936 இல் எவ்வளவாக உயர்ந்தப்பட்டனர்?

**பதினொன்று**

1560) பாதுகாப்புச் சபை ஆண்டுக்கு எவ்வளவு முறை கூடி உலக அமைதி, பாதுகாப்பு பற்றி விவாதிக்கும்?

**மூன்று அல்லது நான்கு**

1561) சர்வதேச சங்கத்தின் பொது செயலாளரை நியமனம் செய்வது எந்த முக்கிய சபை ஆகும்?

**பாதுகாப்பு சபை**

1562) நிரந்தர சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்தில் உள்ள எந்த நகரில் அமைதி மாளிகையில் நிறுவப்பட்டது?

**திஹேக்**

1563) சர்வதேச நீதிமன்றத்தில் எவ்வளவு நீதிபதிகள் பணியாற்றினர்?

**15 நீதிபதிகள்**

1564) நீதிபதிகளின் பதவிக் காலம் எவ்வளவு?

**ஆறு ஆண்டுகள்**

1565) பன்னாட்டு நீதிமன்றம் எவ்வளவு ஆணைகளைப் பிறப்பித்தது?

**200**

1566) சர்வதேச சங்கத்தின் தலைமைச் செயலகம் ஒரு பொதுச் செயலரையும் எவ்வளவு பன்னாட்டு அதிகாரிகளையும் கொண்டு இருந்தது?

**600**

1567) சர்வதேச சங்கத்தின் முதல் பொதுச் செயலர் யார்?

**எரிக் ட்ருமாண்ட்**

1568) பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பை ஏற்படுத்துவதற்கான பரிந்துரைகளை பாரிஸ் மாநாட்டில் எப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டது?

**1919 ஏப்ரல் 28**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1569) வெர் செய்ல்ஸ் உடன் படிக்கையில் எத்தனையாவது பிரிவில் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு சேர்ந்துக் கொள்ளப்பட்டது?

**13 ஆவது பிரிவு**

1570) பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு எங்கு அமைக்கப்பட்டது?

**ஜெனிவா**

1571) பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் தலைமையகம் ஜெனிவாவிலிருந்து மாண்ட்ரீல் நகருக்கு எப்போது மாற்றப்பட்டது?

**கி.பி 1940**

1572) பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு பிற்காலத்தில் எதன் அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது?

**ஐ.நா.சபை**

1573) ஜெர்மனியின் பழைய குடியேற்ற நாடுகளும், துருக்கியிடமிருந்து மீட்ட பாலஸ்தீனமும் உட்பட சில பகுதிகளும் எவ்வாறு அழைக்கப்பட்டன?

**மாண் டேட்டுகள்**

1574) சர்வதேச சங்கம் இத்தாலி கிரீஸ் பிரச்சனையை எந்த ஆண்டு தீர்த்து வைத்தது?

**1923**

1575) கிரீசுக்கும் பல்கேரியாவிற்கும் ஏற்பட்ட பிரச்சனையை சர்வதேச சங்கம் எந்த ஆண்டு தீர்த்து வைத்தது?

**1925**

1576) உலகில் கொடிய வியாதிகளைக் கட்டுப்படுத்த நிரந்தர சுகாதார நிறுவனம் ஒன்றை எந்த ஆண்டு சர்வதேச சங்கம் நிறுவியது?

**கி.பி 1923**

1577) மலேரியா தடுப்புக்குழுவை சர்வதேச சங்கம் எப்போது ஏற்படுத்தியது?

**கி.பி 1923**

1578) சர்வதேச சங்கம் சார்பில் செயல்படும் சுகாதார நிறுவனம் ஒரு மாநாடு கூட்டி கிராமப்புற சுகாதாரம் பற்றி ஆய்வு செய்தது எப்போது?

**1931**

**www. arivukadal.com**
**இவை புத்தகமாக உள்ளது.**

**Cell No : 98651 30130**

1579) சுகாதார மாநாட்டில் எத்தனை நாடுகள் கலந்து கொண்டன?

**23 நாடுகள்**

1580) சார் பள்ளத்தாக்கில் நேர்மையான வாக்கெடுப்பை சர்வதேச சங்கம் நடத்தி அதனை மீண்டும் எந்த நாட்டுக்கு அளித்தது?

**ஜெர்மனி**

1581) 1920 இல் பன்னாட்டு நிதிமாநாட்டை சர்வதேச சங்கம் எங்கு கூட்டியது?

**புரூசல்ஸில்**

1582) சர்வதேச சங்கம் உலகப் பொருளாதார மாநாட்டை புரூசல்ஸில் எந்த ஆண்டு கூட்டியது?

**கி.பி 1927**

1583) சர்வதேச சங்கம் அடிமை வியாபார முறையைத் தடுப்பதற்கு ஒரு பன்னாட்டுச் சிறப்புக் கூட்டத்தை எப்போது கூட்டியது?

**1926**

1584) சர்வதேச சங்கம் சுமார் எத்தனை ஆண்டுகள் செயல்பட்டது?

**20 வருடங்கள்**

1585) சர்வதேச சங்கத்தில் ஜெர்மனி எந்த ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டது?

**1926**

1586) சர்வதேச சங்கத்திலிருந்து ஜெர்மனி எப்போது விலகியது?

**1933**

1587) சர்வதேச சங்கத்திலிருந்து ஜப்பான் எந்த ஆண்டு விலகியது?

**1937**

1588) இத்தாலி சர்வதேச சங்கத்திலிருந்து விலகிய ஆண்டு எது?

**1937**

1589) இரஷ்யா எந்த ஆண்டு சர்வதேச சங்கத்தில் சேர்ந்தது?

**1934**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1590) இரஷ்யா எந்த நாட்டை ஆக்கிரமிப்பு செய்ததால் சர்வதேச சங்கத்திலிருந்து விலக்கப்பட்டது?

**பின்லாந்து**

1591) கி.பி 1936 இல் ஸ்பெயினில் ஜனநாயகம் வீழ்ச்சியடைந்து யார் தலைமையில் இராணுவ ஆட்சி ஏற்பட்டது?

**பிராங்கோ**

1592) 1945 இல் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட வழிகோலிய அமைப்பு எது?

**சர்வதேச சங்கம்**

1593) "League of Nation is dead, Long live united Nations" என்று கூறியவர் யார்?

**செசில் பிரபு**

இரஷ்யப் புரட்சி (1917)

1594) இரஷ்யாவில் பண்பாடற்ற சார் மன்னர்களின் அரசியல் போலிதனத்திற்கும், பழமை வாதிகளின் குருட்டு நம்பிக்கைகளுக்கும் சமாதி கட்டிய புரட்சி எது?

**இரஷ்யப் புரட்சி**

1595) இரண்டாம் நிக்கோலஸின் ஆட்சிக் காலம் என்ன?

**1894 – 1917**

1596) இரஷ்யப் பாராளு மன்றமான எதன் அதிகாரத்தை சார் மன்னர்கள் பறித்துக் கொண்டார்கள்?

**டூமா**

1597) இரண்டாம் நிக்கோலஸ் முதலாவது டூமாவை எப்போது கலைத்தார்?

**1906 சூலை 22**

1598) குடியானவர்களுக்கு நிலமில்லாததால் இரஷ்யாவின் எந்த விவசாய முதலாளிகளிடம் அடிமைகளாக வாழ்ந்தனர்?

**குலக்குகள்**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1599) “தாஸ் காபிடல்” (மூலதனம்) என்ற நூலை எழுதியவர் யார்?

**கார்ல் மார்க்ஸ்**

1600) “கம்யூனசம்” என்ற கருத்தை வெளியிட்டவர் யார்?

**கார்ல் மார்க்ஸ்**

1601) இரஷ்யப் புரட்சியின் வேதநூல் எது?

**தாஸ்காபிடல் (மூலதனம்)**

1602) “Common” என்ற ஆங்கில வார்த்தையிலிருந்து பிறந்த பொதுவுடமை வார்த்தை எது?

**Communism (கம்யூனிசம்)**

1603) கம்யூனிச அரசாங்கம் ஒன்றை புரட்சியின் மூலமே அமைக்க முடியும் என்று கூறியவர் யார்?

**கார்ல் மார்க்ஸ்**

1604) “உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள். நீங்கள் இழக்க விருப்பது உங்கள் அடிமைத் தளங்களை மட்டுமே., நீங்கள் வெல்லவோ இப்பாருலகமே காத்து நிற்கிறது” இது யாருடைய முழக்கமாகும்?

**கார்ல் மார்க்ஸ்**

1605) முதல் உலகப் போர் ஆரம்பித்த போது இரஷ்யாவின் மன்னராக இருந்தவர் யார்?

**இரண்டாம் நிக்கோலஸ்**

1606) இரண்டாம் நிக்கோலஸின் மனைவியான யார் அவருக்காக நாட்டின் அரசியலில் ஆதிக்கம் கொண்டிருந்தார்?

**அலெக்ஸாந்திரா பியோதரவ்னா**

1607) இரண்டாம் நிக்கோலஸ் எந்த செர்பியத் துறவியின் ஆலோசனைப்படியே ஆட்சி புரிந்தனர்?

**கிரிகோரி ரஸ்புதீன்**

1608) ரஸ்புதின் எந்த முறையில் நோய்களைக் குணப்படுத்தும் வல்லமை கொண்டவர்?

**www. arivukadal.com**
**இவை புத்தகமாக உள்ளது.**

**Cell No : 98651 30130**

அறிவுக்கடல் பதிப்பகம்

**ஹிப்னாடிச முறை**

1609) ரஸ்புதீன் யாரை நோயிலிருந்து குணப்படுத்தியதால் அரச குடும்பத்தின் மதிப்பு மிக்க நண்பரானார்?

**இரண்டாம் நிக்கோலஸின் மகன்**

1610) இரஷ்யாவின் முடியாட்சியின் சீர் கேட்டிற்கு எந்த “கிறுக்குத்துறவியே” காரணம் என்று உயர் குடியினர் நம்பினர்?

**ரஸ்புதீன்**

1611) ரஸ்புதீன் எப்போது படுகொலை செய்யப்பட்டார்?

**1916 திசம்பர் 17**

1612) முதல் உலகப் போரில் இரஷ்யா யாருடைய ஆதரவுடன் ஜெர்மனியை எதிர்த்துப் போரிட்டது?

**நேச நாடுகள்**

1613) கார்ல் மார்க்ஸின் கொள்கைகளைப் பின்பற்றிய இரஷ்யப் புரட்சியாளர் யார்?

**லெனின்**

1614) இரஷ்யப் புரட்சி எத்தனை கட்டங்களாக நடைபெற்றது?

**இரண்டு**

1615) இரஷ்யப் புரட்சியின் முதல் கட்டம் எப்போது தொடங்கியது?

**1917 பிப்ரவரி 23 ஆம் நாள்**

1616) 1917 பிப்ரவரி 23 ஆம் நாள் இரஷ்யப் புரட்சி நடந்த போது எவ்வளவு தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்?

**6,70,000 பேர்**

1617) பெட்ரோ கிரேட் நகர் முழுவதும் எப்போது புரட்சியாளர்கள் கட்டுப்பாட்டில் வந்தது?

**1917 பிப்ரவரி 28**

1618) இரஷ்ய மன்னர் இரண்டாம் நிக்கோலஸ் தனது சகோதரர் மைக்கேலை அரசராக நியமித்து விட்டு முடிதுறப்புப் பத்திரத்தில் கையெழுத்திட்டது எப்போது?

**1917 மார்ச் 2**

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130
அறிவுக்கடல் பதிப்பகம்

1619) “முடியாட்சியை வெகு வேகமாக நாடு வாந்தி எடுத்து விட்டது. அது மீண்டும் மக்கள் தொண்டைக்குள் ஒரு போதும் இறங்காது” என்று கூறியவர் யார்?

**ட்ராட்ஸ்கி**

1620) மைக்கேல் இரஷ்ய மன்னர் பதவியை ஏற்று கொண்டாரா? இல்லையா?

**இல்லை**

1621) கி.பி 1917 மார்ச் 3 ஆம் நாள் யார் தலைமையில் இரஷ்யாவில் தற்காலிக அரசு ஒன்று பதவி ஏற்றது?

**ஜார்ஜ் லிவாவ்**

1622) இரஷ்யாவின் தற்காலிக அரசாங்கத்தில் வெளிநாட்டு அமைச்சராக இருந்தவர் யார்?

**மில்யுகோவ்**

1623) தற்காலிக அரசாங்கத்தில் போர்த்துறை அமைச்சர் யார்?

**குக்கோவ்**

1624) தற்காலிக அரசாங்கத்தில் நிதியமைச்சர் யார்?

**தரஸ் செங்கோ**

1625) தற்காலிக அரசாங்கத்தில் செய்தித்துறை அமைச்சர் யார்?

**நெக்ர சோவ்**

1626) தற்காலிக அரசாங்கத்தில் நீதித்துறை அமைச்சர் யார்?

**கெரன்ஸ்கி**

1627) இரஷ்யாவின் தற்காலிக அரசாங்கத்தை அங்கீகரித்த நாடுகள் எது?

**அமெரிக்கா , இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி**

1628) தற்காலிக அரசாங்கத்தின் பிரதமர் ஜார்ஜ் லிவாவ் பதவி விலகிய பின் அடுத்த பிரதமராக பதவியேற்றவர் யார்?

**கெரன்ஸ்கி**

1629) அக்டோபர் புரட்சியின் போது இரஷ்யப் பிரதமராக இருந்தவர் யார்?

**கெரன்ஸ்கி**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1630) இரஷ்யாவின் இரண்டாவது புரட்சி எப்போது ஏற்பட்டது?

**1917 அக்டோபர் மாதம்**

1631) இரஷ்யாவின் அக்டோபர் புரட்சி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

**கம்யூனிசப் புரட்சி**

1632) சுவிட்சர்லாந்திலிருந்த லெனின் எப்போது இரஷ்யாவுக்கு புறப்பட்டார்?

**1917 மார்ச் 27**

1633) லெனின் சுவிட்சர்லாந்திலிருந்து பெட்ரோகிரேட்க்கு எப்போது வந்து சேர்ந்தார்?

**1917 ஏப்ரல் 3**

1634) லெனின் எந்த முழக்கத்துடன் உரை நிகழ்த்தினார்?

**சமதர்மப் புரட்சி வாழ்க**

1635) லெனின் தலைமையிலான இடதுசாரி அமைப்பிற்கு பெயர் என்ன?

**போல்ஸ்சிவிக்**

1636) லெனின் இரஷ்ய மக்களுக்கு எது வழங்குவதாக வாக்குறுதி அளித்தார்?

**சமாதானம், உணவு, நிலம்.**

1637) "மிதவாதிகளின் ஜனநாயகமும், பாராளு மன்றமும், குடியரசும் நமக்குத் தேவையில்லை: நமக்கு வேண்டிய அரசாங்கம், விவசாயிகளாலும், தொழிலாளர்களாலும் தான் அமைக்கப்பட வேண்டும்" என்று கூறியவர் யார்?

**லெனின்**

1638) லெனின் கொள்கையின் தீவிர ஆதரவாளராக மாறிய பெட்ரோகிரேட் சோவியத் தலைவர் யார்?

**டிராட்ஸ்கி**

1639) பெட்ரோகிரேடில் அமைக்கப்பட்ட இராணுவ புரட்சிக் குழுவுக்கு தலைவரானவர் யார்?

**டிராட்ஸ்கி**

1640) ஆயுதம் தாங்கிய போல் சிவிக் கட்சியினர் அக்டோபர் 24 இல் எத்தனை பேர் புரட்சியில் கலந்து கொண்டனர்?

**25,000 பேர்**

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

அறிவுக்கடல் பதிப்பகம்

1641) லெனின் தலைமையில் இரஷ்யாவில் அமைக்கப்பட்ட அரசுக்கு பெயர் என்ன?

**தொழிலாளர்களின் சர்வாதிகார அரசு**

1642) இரஷ்ய மன்னர் இரண்டாம் நிக்கோலசும் அவரது குடும்பத்தினரும் எப்போது கொல்லப்பட்டனர்?

**1918 சூலை 16**

1643) லெனின் தலைமையிலான இரஷ்ய அரசாங்கத்தில் எந்த முறையின் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது?

**கூட்டு பண்ணை விவசாயம்**

லொக்கார்னோ உடன்படிக்கை

1644) ஜெர்மனியும், இரஷ்யாவும் "ராபெல்லா" என்ற உடன்படிக்கையை எந்த ஆண்டு செய்து கொண்டன?

**கி.பி 1922**

1645) ஜெர்மனியையும், இரஷ்யாவையும் பிரிக்க, இங்கிலாந்து முயற்சியால் பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் எது?

**லொக்கார்னோ ஒப்பந்தம்**

1646) "லொக்கார்னோ" ஸ்வீட்சர்லாந்திலுள்ள எந்த ஏரிக்கரையில் அமைந்துள்ள அழகிய இடமாகும்?

**மாகியோர் (Maggiore)**

1647) லொக்கார்னோ ஒப்பந்தங்களின் நகல் இலண்டனில் எப்போது கையெழுத்தானது?

**1925 திசம்பர் 1**

1648) "லொக்கார்னோ ஒப்பந்தம் போர்க்காலத்திற்கும் அமைதிக் காலத்திற்கும இடைப்பட்ட எல்லை வரைகோடு" என்று கூறிய இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் யார்?

**சேம்பர்லேன்**

1649) வெர் செய்ல்ஸ் உடன்படிக்கைக்கும், சர்வதேச சங்கத்தின் விதிமுறைகளுக்கும் கிடைத்த பெரிய அடியாக விளங்கிய ஒப்பந்தம் எது?

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

**லொக்கார்னோ ஒப்பந்தம்**

1650) அரிஸ்டைட் பிரையண்ட் எந்த நாட்டின் வெளியுறவு அமைச்சராக இருந்தார்?

**பிரான்ஸ்**

1651) பிராங்க் கெல்லாக் எந்த நாட்டின் வெளியுறவுச் செயலாளராக இருந்தார்?

**அமெரிக்கா**

1652) பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் 15 நாடுகள் கூடி கெல்லாக் பிரையண்ட் ஒப்பந்தத்தை எப்போது செய்து கொண்டனர்?

**1928 ஆகட்ஸ் 27**

1653) "தங்கள் நாட்டு தேசியக் கொள்கையில் போரைச் சட்டப்படி அமைந்துள்ள ஒரு கருவியாக தாங்கள் கருதவில்லை" என எந்த ஒப்பந்த நாடுகள் அனைத்தும் அறிவித்தன?

**"கெல்லாக் பிரையண்ட் ஒப்பந்த" நாடுகள்**

1654) கெல்லாக் பிரையண்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முக்கிய நாடுகள் எவை?

**அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து,இரஷ்யா,ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி**

நிக்கோலாய் லெனின்

(1870 – 1924)

1655) இரஷ்யப் புரட்சியின் சிற்பியான லெனின் எப்போது பிறந்தார்?

**கி.பி.1870 ஏப்ரல் 10**

1656) இரஷ்யாவிலுள்ள வோல்கா நதியருகிலுள்ள எந்த ஊரில் லெனின் பிறந்தார்?

**சிம்பிரிஸ்க்**

1657) லெனின் இயற்பெயர் என்ன?

**விளாடிமிர் இலியச்யூலியனோவ்**

1658) லெனின் உடன் பிறப்புகள் எத்தனை பேர்?

**இரண்டு சகோதரர்கள், மூன்று சகோதரிகள்**

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

1659) லெனின் சகோதரரான யார் இரண்டாம் நிக்கோலாஸை கொல்லச்சதி செய்ததாக கூறி கி.பி.1887 – மார்ச்சில் தூக்கிலிடப்பட்டார்?

**சகோதரர் அலெக்சாண்டர்**

1660) "தனிப்படை மனிதர்களின் பயங்கரவாதத்தின் மூலம் சமுதாயத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரமுடியாது, ஒரு அமைப்பு அல்லது நிறுவனத்தின் மூலம் அதிகாரத்தைப் பெற்றால் சமுதாய மாற்றத்தை கொண்டு வரலாம்" என உணர்ந்தவர் யார்?

**லெனின்**

1661) ஹாசன் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயில லெனின் எந்த ஆண்டு சேர்ந்தார்?

**1887**

1662) பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் ஒரு வெளி மாணவராக எப்போது லெனின் சேர்ந்தார்?

**1890**

1663) எந்த ஆண்டு லெனின் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார்?

**1891**

1664) லெனினின் மனைவி பெயர் என்ன?

**நடேஷ்டா கான்ஸ் டான்டி நோவா கிருப்ஸகயா**

1665) "Memoirs"என்ற லெனின் பற்றி நூலை எழுதியவர் யார்?

**நடேஷ்டா கான்ஸ்டான்டி நோவா கிருப்ஸகயா**

1666) பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு லெனின் எப்போது சுற்றுப்பயணம் மேற் கொண்டார்?

**கி.பி.1895**

1667) "தொழிலாளர் விடுதலைக்கான போராட்ட சங்கம்" என்ற சங்கத்தை அமைத்தவர் யார்?

**லெனின்**

1668) லெனின் எந்த ஆண்டு சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்?

அறிவுக்கடல் பதிப்பகம்

www. arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

**1897**

1669) நாடு கடத்தப்பட்ட பிறகு லெனின் எந்த ஆண்டு தாய்நாடு திரும்பினார்?

**1900 சனவரி**

1670) லெனின் நாடு திரும்பும் போது அவருக்கு வயது என்ன?

**முப்பது**


**இதன் தொடர்ச்சி புத்தகமாக உள்ளது. மெட்டீரியல் / புத்தகம் பெற விரும்புபவர்களுக்கு இந்த எண்ணை (98651 30130) தொடர்பு கொள்ளவும்.**

அறிவுக்கடல் பதிப்பகம்